
பக்கங்கள்: 08 விலை : 20/-

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 14 திங்கட்கிழமை 27.04.2020 கதிர் 41



# 557 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஏப். 27

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு மேலும் 30 பேர் இலக்காகியுள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் மொத்த எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

2

# முப்படைகளுக்குள்ளேயும் ஊடுருவியது கொரோனா!

## விமானப்படைச் சிப்பாய்க்கும் தொற்று

கொழும்பு, ஏப்ரல் 27

கடற்படை, இராணுவச் சிப்பாய்களுக்கு இடையே ஏற்கனவே தொற்றியிருந்த கொரோனா இப்போது விமானப்படைக்குள்ளேயும் நுழைந்துள்ளது. இந்தத் தொற்று நிலை இப்போது படை வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

2

## சிறைச்சாலை ஊழியருக்கு கொரோனா தொற்றில்லை

வவுனியா, ஏப். 27

வவுனியா வைத்தியசாலையில் கொரோனா சந்தேகத்தில் அனுமதிக்கப்பட்ட சிறைச்சாலை உத்தியோகத்தருக்கு தொற்று இல்லை என மருத்துவப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

2

## ஓ.எல். பெறுபேறுகள் மாலை வெளியாகின

யாழ்ப்பாணம், ஏப். 27

2019ஆம் ஆண்டு டிசெம்பரில் இடம்பெற்ற க.பொ.த சாதாரண தர பரீட்சையின் பெறுபேறுகள் பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் தொற்றுநோய் பரவுவதால், பெறுபேறுகள் பாடசாலைகளுக்கு இப்போது தபாலில் அனுப்பிவைக்கப்படாது.

2

## கோப்பாய் கல்வியியற் கல்லூரிக்கு முன் பொலிஸார், இராணுவத்தினர் குவிப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 27

கோப்பாய் தேசியக் கல்வியியற் கல்லூரியில் முப்படையினரையும் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில் அந்தக் கல்லூரியின் முன்னாள் இராணுவத்தினர், பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

விடுமுறையில் சென்ற முப்படையினரும் மீண்டும் படை முகாம்களுக்கு அழைக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களைத் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக கோப்பாய் ஆசிரியர் கல்லூரியை இரணுவத்தினர் கைவசப்படுத்தியுள்ளனர். கல்லூரியில் இரு விடுதிகளில் முப்படையினரும் தங்க வைக்கப்பட உள்ளனர்.

2

## மட்டக்களப்பு நகரில் புடவைக் கடையில் தீ




மட்டக்கலப்பு, ஏப். 28

மட்டக்களப்பு நகர் பகுதியில் அமைந்துள்ள பிரபல புடைவைக் கடை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தால் அக்கடை பலத்த சேதத்துக்கு உள்ளாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் புடவைக்கடை மூடப்பட்டிருந் நிலையில் நேற்று முற்பகல் 11 மணியவில் தீவிபத்து இடம் பெற்றுள்ளது.

2

## ரஞ்சன் 'பாஸ்'

கொழும்பு, ஏப். 27

க.பொ.த சாதாரணதர பரீட்சை முடிவுகள் இன்று வெளியாகியுள்ளன.

க.பொத.த சாதார தர பரீட்சையில் ஆங்கில பாடத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவும் தோற்றியிருந்தார். அவர் பரீட்சையில் சித்தியெய்தியுள்ளார். அவர் சி பெறுபேற்றைப் பெற்றுள்ளார்.

## ராஜபக்ஷக்களின் கோட்டைக்குள்ளும் கொரோனா ஊடுருவல்

### 21 மாவட்டங்கள் பாதிப்பு

கொழும்பு, ஏப். 27

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகிய மாவட்டங்கள் 21ஆக உயர்ந்துள்ளது.

வெலிசறை கடற்படை முகாமில் இருந்து

2

## விபத்திலிருந்து மயிரிழையில் தப்பினார் மயோன் முஸ்தபா!



முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர் மயோன் முஸ்தபா மற்றும் அவரது புதல்வியர் பயணித்த கார் மட்டக்களப்பு அரசடி யில் இன்று காலை மதில் மீது மோதியது.

தெய்வாதீனமாகக் காரில் பயணித்த இருவருக்கும் பாதிப்பில்லையெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

2

## முருகனின் தந்தையார் சாவு இத்தாவிலில் இறுதிநிகழ்வு



ராஜீவ் காந்தி கொலை வழக்குத் தொடர்பாக இந்தியா வேலூர் சிறையில் சிறைவாசம் அனுபவித்துவரும் முருகனின் தந்தையார் வைரவப்பிள்ளை வெற்றிவேலு சாவகச்சேரி தனியார் வைத்தியசாலையில் இன்று காலை காலமானார்.

2

## 10,346 பேருருக்கு 9 பாடங்களில் 'ஏ'!

கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையில் 10,346 மாணவர்கள் 9 பாடங்களில் 'ஏ' சித்திகளைப் பெற்றுள்ளனர் எனப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் 73.84 வீதமானோர் கல்வி பொது தராதர பத்திர உயர்தரத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், 66.82 வீதமானோர் கணித பாடத்தில் சித்தி பெற்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அடையாள அட்டையின் இறுதி இலக்க செயற்திட்டம் நாளை முதல் நடைமுறை

கொழும்பு, ஏப். 27

ஊரடங்கு தளர்த்தப்படும்வேளையில் அடையாள அட்டை கடைசி இலக்கத்தின் அடிப்படையில் பொது மக்கள் தமது அத்தியாவசி தேவைகளை நிறைவு செய்யும் தேசிய திட்டம் நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் என்று பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் புத்தளம் மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய 21 மாவட்டங்களிலும் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு நடைமுறைக்கு வந்த ஊரடங்குச் சட்டம் நாளை செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணிக்கு தளர்த்தப்படவுள்ளது.

2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



### 557 பேருக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நள்ளிரவு 523 ஆக காணப்பட்ட நிலையில் மேலும் 30 பேர் தொற்றுக்கு உள்ளாகி யுள்ளனர்.

இந்நிலையில் தற்போது 557 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி அடையாளம் காணப் பட்டுள்ளனர்.

கொரோனா தொற்றுக்கு சிகிச்சை பெற்றவர்களில் நேற்றும் 6 பேர் வீடு திரும்பியுள்ள நிலையில் குணமடைந்தவர்கள் எண்ணிக்கை 126 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சிறைச்சாலை ஊழியருக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காய்ச்சல் காரணமாக நேற்று மாலை வவுனியா சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அந்தநபரைதனிமைப்படுத்திகொரோனா தொற்று உள்ளதா என்பதைப் பரிசோதிப்பதற்காக அவரது மாதிரிகள் பெறப்பட்டு அனுராதபுரத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

பரிசோதனையில் சிறைச்சாலை உத்தியோகத்தருக்கு கொரோனா தொற்று ஏற்படவில்லை என்பது தெரியவந்துள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### முப்படைகளுக்குள்ளேயும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் முப்படைகளுக்குள்ளேயும் கொரோனாதொற்றுநிலைஇனங்காணப்பட்டுள்ளதால் படையினர் மத்தியில் அச்ச நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இலங்கை விமானப்படை பாண்ட் பிரிவின் சிப்பாய் ஒருவர் கொரோனா தொற்றுக்குள்ளாகி கொழும்பு ஐ.டி.எச். வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சிப்பாயுடன் நெருக்கமாகப் பழகியவர்கள் தனிமைப்படுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை, இந்தச் சிப்பாய் கொழும்பில் உள்ள தனியார் தொலைக்காட்சி நிலையமொன்றில் நிகழ்ச்சிக்காக வந்து சென்றுள்ளமையால் அந்த நிகழ்ச்சியை நடத்தியவர்கள் குறித்தும் சுகாதார, பாதுகாப்புத் தரப்பு கவனம் செலுத்தியுள்ளது.

ஏற்கனவே கடற்படை, இராணுவம், பொலிஸ் துறைகளுக்குள் ஊடுருவிய கொரோனா வைரஸ் இப்போது விமானப்படைக்குள்ளும் பரவ ஆரம்பித்துள்ளமை பாதுகாப்புத் தரப்பினரை அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

### அடையாள அட்டையின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊரடங்கு தளர்த்தப்படும் மாவட்டங்களில் மக்கள் அத்தியாவசிய தேவைகளுக்கு வெளியில் வருவதற்கு புதிய பொறிமுறை ஒன்று ஜனாதிபதி செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச மற்றும் தனியார் துறை உத்தியோகத்தர்கள், விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு இந்த நடைமுறை பொருந்தாது. ஏனையவர்களுக்கு தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்கத்தின் அடிப்படையிலான செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

இருப்பினும் சிறப்பு மருத்துவ நிலைமைகள் உள்ளவர்கள் மற்றும் கிளினிக்கில் கலந்துகொள்பவர்கள் பயணிக்க அனுமதிக்கப்படுவார்கள். மேலும் அவர்கள் சம்பந்தப்பட்ட மருத்துவ ஆவணங்களைப் பொலிஸ் சோதனையில் சமர்ப்பிக்கவேண்டும்.

அபாய வலயங்களான கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் அத்தியாவசிய கடமைகளில் ஈடுபடுவோர் கட்டுப்பாடுகள் இல்லாமல் பயணிக்க அனுமதிக்கப்படுவார்கள். ஊரடங்கு உத்தரவு அனுமதி இல்லாத வேறு எந்த நபரும் வெளியேற அனுமதிக்கப்படமாட்டார்கள் - என்றார்.

### முருகனின் தந்தையார் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அன்னாரது சொந்த ஊரான இத்தாவில், பளை, கிளிநொச்சியிலுள்ள அவரின்வீட்டில்உடலம்வைக்கப்பட்டுள்ளது.

இறுதிக்கிரிகைகள் நாளை செவ்வாய்க்கிழமை மதியம் 1.00மணிக்கு நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(மேலும் செய்தி 07ஆம் பக்கத்தில்)

### மட்டக்களப்பு நகரில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புடைவைக்கடையில் இருந்து புகை வருவதை அவதானித்த எதிரில் உள்ள பலசரக்குக் கடை உரிமையாளர் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மற்றும் இராணுவத்தினர், மட்டக்களப்பு மாநகர தீயணைப்புப் பிரிவினர் ஆகியோர் ஒன்றிணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்தத் தீ விபத்தின்போது புடவைக் கடையின் முதலாவது மாடி முற்றாக தீப்பற்றி எரிந்துள்ளது. தீப்பற்றியமைக்கான காரணம் மின்னொழுக்காக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

# திருகோணமலை மாவட்டத்தின் முதல் கொரோனாத் தொற்றாளர்

திருகோணமலை, ஏப்ரல் 27

திருகோணமலை மாவட்டத்தின், பதவிசிறிபுர பகுதியில் கொரோனா தொற்றுக்குள்ளான ஒருவர் இனங்காணப்பட்டுள்ளாரென, பதவிசிறிபுர சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு இணங்காணப்பட்டவர் பதவிசிறிபுர - 10 கொலனியைச் சேர்ந்த 28 வயதுடைய கடற்படைச் சிப்பாய் எனவும் தெரியவருகின்றது.

வெலிசறை கடற்படை முகாமில் கடமையாற்றி வந்தவர் எனவும் இவரது மாதிரிகள், அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பரிசோதனை செய்யப்பட்டிருந்த நிலையில் இவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் பதவிசிறிபுர சுகாதார வைத்திய அதிகாரி எரங்க குறு சிங்க தெரிவித்தார்.

அத்துடன், இந்நோயாளியுடன் தொடர்புடைய மூன்று குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## 3 பல்கலைகளில் கொரோனா பரிசோதனை

கொழும்பு, ஏப்ரல் 27

கொரோனா தொற்றாளர்களை அடையாளம் காண்பதற்காக, முன்னெடுக்கப்படும் பரிசோதனைகளை இலங்கையிலுள்ள 3 பல்கலைக்கழகங்களின் இரசாயன ஆய்வு கூடங்களில் ஆரம்பிக்க தயாராகவிருப்பதாக சுகாதார சேவை பணிப்பாளர் வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய பேராதனை, களணி, கொழும்பு ஆகிய பல்கலைக்கழகங்கள் ஊடாக இந்தப் பரிசோதனைகளை முன்னெடுக்க கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### விபத்திலிருந்து மயிரிழையில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பிலிருந்து கல்முனை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோதே கார் விபத்துக்குள்ளானது.

### ஓ.எல். பெறுபேறுகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் பாடசாலை அதிபர்களுக்கு பெறுபேறுகள் இணையத்தில் (ஒன்லைன்) கிடைக்கும்.

மாகாண கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் வலயக் கல்வி பணிப்பாளர்களுக்கு இணையம் ஊடாகப் பெறுபேறுகளை அனுப்பிவைக்கப்படும்.

அத்துடன், மாணவர்கள் பரீட்சைகள் திணைக்களத்தின் அதிகாரப்பூர்வ இணையத்தளமான https://doenets.lk/examresults என்ற முகவரிக்குச் சென்று தமது பெறுபேற்றைப் பார்வையிட முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஏ.எல்., புலமைப்பரிசில் பரீட்சைகள் ஓகஸ்டில்

கொரோனா தொற்று நோய் காரணமாகப் பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள்தாமதமாகிவிட்டன. எனினும் க.பொ.த. உயர்தரப் பரீட்சை, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை என்பன திட்டமிட்டவாறு ஓகஸ்டில் நடைபெறும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் எம்.எச்.எம் சித்திரானந்தா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - 2020ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு 3 லட்சத்து 67 ஆயிரம் மாணவர்கள் இணையம் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளனர். அத்துடன், கல்வி உதவித்தொகைக்கான தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு 3 லட்சத்து 38 ஆயிரம் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. இந்தப் பரீட்சைகள் அனைத்தும் உரிய திகதிகளில் நடைபெறும் - என்றார்.

### ராஜபக்ஷாக்களின் கோட்டைக்குள்ளும் .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுறையில் வீடு சென்ற சிப்பாய்கள் தமது சொந்த மாவட்டங்களிலுள்ள வைத்தியசாலைகளில் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டு வருகின்றமையால் அவர்களின் மாவட்டங்களும் பாதிப்பில் உள்ளடக்கப்பட்டு வருகின்றன.

அதற்கமைய ராஜபக்ஷக்களின் கோட்டையான அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களும் கொரோனாவால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்குள் புதிதாக இணைந்துள்ளன.

சுகாதார அமைச்சு இன்று வெளியிட்டுள்ள அறிக்கையின் பிரகாரம் கொழும்பு மாவட்டத்தில் 155 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 63 பேரும், புத்தளம் மாவட்டத்தில் 39 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 41 பேரும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 16 பேரும், குருநாகல் மாவட்டத்தில் 15 பேரும், கண்டி மாவட்டத்தில் 11 பேரும், அநுராதபுரம் மாவட்டத்தில் 10 பேரும், இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களில் தலா 7 பேர் வீதமும், மொனராகலை மாவட்டத்தில் 4 பேரும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 3 பேரும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், அம்பாறை, மாத்தறை, பதுளை மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் தலா 2 பேர் வீதமும், காலி, மட்டக்களப்பு, பொலனறுவை, மாத்தளை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவர் வீதமும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நுவரெலியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய நான்கு மாவட்டங்களில் இன்னும் எவரும் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்படவில்லை.

இதனிடையே வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பியவர்களைத் தனிமைப்படுத்தும்நிலையங்களில் 41 பேரும், வெளிநாட்டுப் பிரஜைகள் 03 பேரும், வெலிசறை கடற்படை முகாமிலுள்ள தனிமைப்படுத்தல் நிலையத்தில் 95 பேரும் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

#### 126 பேர் குணமடைவு: 390 பேர் சிகிச்சையில்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் இதுவரை 523 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களில் மேலும் 6 பேர் குணமடைந்து இன்று வீடு திரும்பியுள்ளனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அதற்கமைய கொரோனா வைரஸிலிருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 120 இலிருந்து 126 ஆக அதிகரித்துள்ளது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 07 ஆகக் காணப்படுகின்றது.

தற்போது 390 நோயாளிகள் 7 வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் 138 பேர் கொழும்பு தேசிய தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலையிலும், 58 பேர் வெலிக்கந்தை ஆதார வைத்தியசாலையிலும், 67 பேர் முல்லேரியா ஆதார வைத்தியசாலையிலும், 21 பேர் இரணவில வைத்தியசாலையிலும், 55 பேர் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையிலும், 06 பேர் மினுவாங்கொடை ஆதார வைத்தியசாலையிலும், 45 பேர் வெலிசறையிலுள்ள கடற்படை வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, மேலும் 295 பேர் 32 வைத்தியசாலைகளில் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர் என்று சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

### கோப்பாய் கல்வியியற் கல்லூரிக்கு முன் .......






(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந் நிலையில் இந்தக் கல்லூரியின் முன்பாக இராணுவம் மற்றும் பொலிஸார் இன்று காலை பெருமளவில் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உயர்நீதிமன்றம் மூலமே தீர்வு

நாட்டில் நாடாளுமன்றம் இப்போது செயற்பாட்டில் இல்லை. இருந்த நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு ஒன்றரை மாதம் கடந்து விட்டது. அடுத்த இரண்டு, மூன்று மாதங்களில் தேர்தல் நடக்கும் என்று எதிர்பார்ப்பதற்கும் இடமில்லை.

அதனால் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுமாறு எதிர்க்கட்சிகள் எல்லாம் ஜனாதிபதியிடம் ஒன்றித்துக் கோரிக்கை விடுத்திருக்கின்றன.

இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லோரும் ஒப்பமிட்ட கூட்டறிக்கை இன்று காலை எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தின் மூலம் ஜனாதிபதி செயலகத்துக்கு ஒப்படைக்கப்பட்டமையோடு அந்தக் கூட்டறிக்கை பகிரங்கப்படுத்தப்பட்டுமிருக்கின்றது.

இந்தக் கூட்டறிக்கையில் ஜே.வி.பி. இன்னும் ஒப்பம் இடவில்லை. எனினும் கூட்டறிக்கையை வரவேற்று ஜே.வி.பி யிடமிருந்து ஓர் அறிவித்தல் வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்த வகையில் கூட்டறிக்கை விடயங்களை ஒட்டுமொத்த எதிரணியின் நிலைப்பாடாகக் கருத முடியும்.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுமாறு கோருவதே எதிரணியின் கூட்டறிக்கையில் பிரதான விடயமாகும்.

அக்கோரிக்கை தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபாயவின் பதில் யாது என்பது இன்னும் உத்தியோகபூர்வமாக வெளியாகவில்லையாயினும் அது எவ்வாறு அமையும் என்பதை ஊகிப்பது அவ்வளவு ஒன்றும் கஷ்டமான காரியம் அல்ல.

ஏனெனில் இந்த விவகாரம் தொடர்பில் தமது நிலைப்பாடு யாது என்பதை ஏற்கனவே அவர் வெளிப்படையாகத் தெரிவித்திருந்தார்.

கலைத்த நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுவதற்கான வாய்ப்பு இல்லை, அதற்கான இடம் சட்டத்தில் இல்லை என்பதுதான் அவரது நிலைப்பாடு.

அண்மையில் பௌத்த மத பீடங்களின் தலைவர்களைத் தாம் சந்தித்தபோது அவர் இதனைப் பகிரங்கமாக வெளியிட்டிருந்தார்.

* கலைத்த நாடாளுமன்றத்தை மீளவும் கூட்ட முடியாது.
* கொரோனா அச்சுறுத்தல் இருந்தாலும் அறிவிக்கப்பட்ட தேர்தலை எப்படியும் நடத்தி முடிப்பேன்.

இந்த இரண்டிலும் தாம் விடாப்பிடி உறுதியாக உள்ளார் என்பதை அவர் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகின்றார்.

ஆனால் களநிலைமை – நிலைவரம் – அப்படி இருப்பதாகத் தெரியவில்லை.

கொரோனாத் தொற்றுப் பரவல் பற்றிய செய்திகள் பெருங் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளன. கட்டுக்குள் இருக்கும் என எதிர்பார்க்கப்பட்ட பரவல் இப்போது கட்டுமீறி, எல்லை கடந்து விரிவுபட்டுக் கொண்டிருப்பதாகவே தோன்றுகின்றது.

இந்தப் பின்புலத்தில் உடனடியாகத் தேர்தல் சாத்தியமில்லை என்பது போலவே பலரும் கருதுகின்றனர்.

கொரோனாவைக் கட்டுப்படுத்தித் தேர்தலை நடத்துவேன் என்பதை அரசியல் பிரசாரக் கூட்ட உறுதிமொழி போல ஜனாதிபதி வெளியிட்டாலும் அதன் சாத்தியப்பாடு சந்தேகத்துக்குரியதே. அதேபோன்றுதான் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுவதற்கு இடமில்லை என்ற ஜனாதிபதியின் கூற்றும்.

இவ்விடயத்தை ஒட்டி எதிரணிகள் இப்போது வைத்திருக்கும் பொதுக் கோரிக்கைக்கு ஜனாதிபதியிடமிருந்து சாதகமான பதில் வராவிட்டால் எதிரணிகள் நீதிமன்றத்தை நாடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பெரும்பாலும் ஜனாதிபதியிடமிருந்து பதிலே வராத சூழலில் அடுத்து வரும் நாள்களில் எதிரணி உயர்நீதிமன்றத்துக்குப் போவது தவிர்க்க முடியாததாக இருக்கும் என்கின்றன அரசியல் வட்டாரங்கள்.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை எந்தெந்தச் சூழ்நிலையில் மீளக் கூட்டலாம், மீளக் கூட்ட வேண்டுமா என்பவை உட்பட்ட விடயங்களுக்கு விளக்கமளிக்கும் உத்தரவை உயர்நீதிமன்றம் வழங்கும் என எதிர்பார்க்க முடியும்.

கடந்த நான்கு, ஐந்து ஆண்டுகளாக இலங்கையின் உயர் நிலை நீதிமன்றங்கள் விசேட தீர்ப்புகளையும் உத்தரவுகளையும் வழங்கி வரும் பின்னணியில் தற்போதைய சூழலிலும் அரசமைப்பு வாசகங்களுக்குப் புதிய பொருள் கோடல்களை முன்வைத்து அது தீர்ப்பை வழங்கும் என எதிர்பார்க்கலாம்.

அதன் பின்னர் கொரோனாத் தொற்றுப் பரவலால் இழுபறிக்கு உள்ளாகியிருக்கும் பொதுத் தேர்தல் சர்ச்சைக்கு ஒரு தீர்வு – முற்றுப்புள்ளி – வரும் என நம்பலாம்.

# மட்டு. மாநகரசபையினால் நகரில் கிருமியகற்றும் பணி





பொதுமக்கள் தங்களது அத்தியாவசியத் தேவைகளுக்காக நகரில் அணுகும் இடங்களில் மட்டக்களப்பு மாநகரசபையின் சுகாதார மற்றும் தீயணைப்புப் பிரிவினரால் கிருமியகற்றும் பணி இடம்பெற்றது.

பொதுமக்களின் சுகாதார நலன் கருதி மட்டக்களப்புப் பொலிஸாரின் நீர் பீச்சியடிக்கும் வாகனத்தைப் பயன்படுத்தி சுமார் 20,000 லீற்றர் கிருமிநாசினி வியாபார நிலையங்கள், மத்திய மற்றும் தனியார் போக்குவரத்து நிலையங்கள், ரயில் நிலையம் மற்றும் பிரதான வீதிகளில் விசிறி தொற்று நீக்கும் பணிகள் இடம்பெற்றன.

இதே வேளை புளியந்தீவு வெற்றிகள் விளையாட்டுக் கழக அங்கத்தினர்களால் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வெளிவளாகம் மற்றும் மத்திய வீதி, லேக் வீதி உள்ளிட்ட பிரதேசங்களில் கிருமியகற்றும் பணியும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாநகர முதல்வர் தி.சரவணபவன், மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சகர் எல்.ஆர்.குமாரசிறி, சுகாதார நிவையியற் குழுவின் தலைவர் சிவம் பாக்கியநாதன், மாநகரசபை உறுப்பினர் து.மதன் மற்றும் தீயணைப்புப் பிரிவின் பொறுப்பாளர் வி.பிரதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கொரோனா தாக்கத்தினால் டுபாயில் இலங்கையர் சாவு

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளா கிச் சிகிச்சை பெற்று வந்த இலங்கையர் ஒரு வர் டுபாயில் உயிரிழந்துள்ளார்.

மத்தேகொட பகுதியைச் சேர்ந்த டுபாய் சிவில் விமான சேவைகள் அதிகார சபையில் கடமையாற்றிய ரசிக்க டி சில்வா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் கொழும்பு டி எஸ் சேனநாயக்க கல்லூரியின் பழைய மாணவராவர்.

# தனிமைப்படுத்தலுக்கான மையங்களாக பாடசாலைகளை மாற்றவே மாட்டோம்!

## லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா உறுதி



பாடசாலைகளைத் தனிமைப்படுத்தல் நிலையங்களாக மாற்றும் திட்டம் இல்லை என்று கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளை அரசு தனிமைப்படுத்தல் நிலையங்களாக மாற்றி வருகின்றது என வெளிவந்த செய்தி தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாடசாலைகள் தனிமைப்படுத்தல் நிலையங்களாக மாற்றப்பட மாட்டாது என நான் உறுதியாகக் கூற விரும்புகின்றேன். அனைத்துப் படையினரும் முகாம்களுக்கு அழைக்கப்பட்டுள்ளதால், அவர்களை ஒரே இடத்தில் தங்க வைக்க முடியாமல் இருப்பதால் சில பாடசாலைகளை வழங்குமாறு கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

இந்தநிலையில், பாடசாலைகளைத் தனிமைப்படுத்தல் நிலையங்களாக மாற்ற வேண்டிய எந்தத் தேவையும் இல்லை. அவ்வாறு வெளிவந்த செய்தியை நிராகரிக்கின்றேன். தனிமைப்படுத்தல் நிலையங்கள் புறம்பாக இருக்கின்றன. அவற்றை நாம் பராமரிப்போம் - என்றார்.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் இராணுவப் பாதுகாப்பு போடப்பட்டுள்ளமை வழமையான அப்பகுதி பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஒன்று எனவும், பொலிஸார்தான் அப்பகுதிகளில் பாதுகாப்பில் உள்ளனர் எனவும் அவர் மேலும்குறிப்பிட்டுள்ளார்.

# ஊடகக் குருகுலம்

ஊடக ஜாம்பவான் திரு வித்தியாதரன் மற்றும் காலைக்கதிரின் அனுபவம்மிக்க ஆசிரியர் குழுவின் கீழ் ஊடகத்துறையினை கற்க ஓர் அரிய சந்தர்ப்பம்.

அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம் ஆகியவற்றை அடிப்படையில் இருந்து கற்றுத்தேர்ந்திட காலைக்கதிரின் ஊடக குருகுலத்தில் இணையுங்கள்.

ஊடகத்துறையில் ஆர்வமுள்ள யாரும் இணைந்துகொள்ளலாம்.

உங்களின் சுயவிபரக்கோவையினை **kalaikkathironline@gmail.com** எனும் மின்னஞ்சல் முக வரிக்கு அனுப்பிவையுங்கள்.

**தொடர்புகளுக்கு: 076 443 8623**

**தகவல் - நிர்வாகி**
**பசுமை ஊடகம்**

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



## கொரோனாவால் தமிழகத்தில் சிக்கி இருந்த பின்

# 600 கடல் மைல்கள் பயணித்து வீடு திரும்பினர் 38 மீனவர்கள்!



கொரோனா ஊரடங்கால் சென்னையில் சிக்கிய ஒடிசா மீனவர்கள் 38 பேர், 5 நாள் படகு பயணம் மூலம் சொந்த ஊரைச் சென்றடைந்தனர்.

சொந்த ஊரை விட்டு இடம் பெயர்ந்து, பிற மாநிலங்களுக்குப் பிழைப்பு தேடி வந்த தொழிலாளர்கள் நிலை, இந்தியாவில் திடீரென ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதால் மிகப்பரிதாபமாக அமைந்து விட்டது.

ஊரடங்கால் வேலை பார்க்க முடியாத நிலை ஒரு பக்கம் என்றால், போக்குவரத்து சாதனங்கள் முடக்கத்தால் சொந்த ஊருக்கும் போக முடியாத அவல நிலை மறுபக்கம் என்றாகி விட்டது. பலர் கால் நடையாக பல 100 கி.மீ. தொலைவுக்கு பட்டினியாக நடந்து சென்ற பரிதாப நிகழ்வுகளும் நடந்துள்ளன.

ஒடிசாவில் இருந்து இடம் பெயர்ந்து சென்னைக்கு வந்து மீன் வியாபாரி ஒருவரிடம் வேலை பார்த்த 38 மீனவர்களும் இவ்வாறு சிக்கிக்கொண்டனர்.

ஊரடங்கால் பசியால் தவித்த அவர்கள் வாடகைப் படகை அமர்த்திக்கொண்டு 5 நாட்கள் கடல்பயணத்துக்கு பின்னர் ஒடிசா போய்ச்சேர்ந்துள்ளனர். அங்கு அவர்கள் குடும்பத்தினரைக் கூட சந்திக்க முடியாமல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் பலநாட்களாகப் பட்டியாகக் கிடந்த பின்னர்தான் எப்படியாவது ஊருக்கு போய்ச்சேர்ந்தால் போதும் என்ற முடிவுக்கு வந்தோம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

இரட்டை இயந்திரம் கொண்ட மரப் படகு ஒன்றில் சுமார் 600 கடல் மைல்கள் பயணித்து அவர்கள் தமது சொந்த ஊரான சிகிட்டி பட்டிசோனாப்பூர் கடலோரப் பகுதிக்கு அவர்கள் வந்து சேர்ந்தனர். ஆனால் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

# இந்தியாவில் கொரோனா 28 ஆயிரத்தை எட்டுகிறது

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 28 ஆயிரத்தை நெருங்கி உள்ள நிலையில், இதுவரை 872 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க ஊரடங்கு உத்தரவு, நோய் அறிகுறி உள்ளவர்களைத் தனிமைப்படுத்தி கண்காணித்தல், சமூக விலகலைப் பராமரித்தல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்திய மத்திய சுகாதாரத் துறை இன்று காலை வெளியிட்டுள்ள தகவலின்படி, இந்தியாவில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 27 ஆயிரத்தை கடந்து 28 ஆயிரத்தை நெருங்கியுள்ளது. மொத்தம் 27,892 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரசால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 872 ஆக உயர்ந்துள்ளது. 6 ஆயிரத்து 185 பேர் கொரோனா பாதிப்பில் இருந்து மீண்டுள்ளனர்.

நாட்டிலேயே அதிகபட்சமாக மகாராஷ்டிர மாநிலத்தில் 8 ஆயிரத்து 68 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 342 பேர் உயிரிழந்துள்ளனர். குஜராத்தில் 3 ஆயிரத்து 301 பேருக்கு நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 151 பேர் உயிரிழந்துள்ளனர். தலைநகர் டெல்லியில் 2 ஆயிரத்து 918 பேருக்குத் நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 54 பேர் உயிரிழந்துள்ளனர்.

# கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த பரிசோதனைகள் அதிகரிக்கவேண்டும்

## முன்னாள் இந்திய பிரதமர் மன்மோகன் சிங் வலியுறுத்து



கொரோனாவை கட்டுப்படுத்த பரிசோதனை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டும் என்று இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் கூறி உள்ளார்.

கொரோனாவைக் கட்டுப்படுத்துவது மற்றும் அது தொடர்பான பிரச்சினைகள் குறித்து ஆலோசனைகளை வழங்கவும், கட்சியின் கருத்துகளை தெரிவிக்கவும் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான குழு ஒன்றை காங்கிரஸ் அமைத்துள்ளது.

இந்தக் குழு மத்திய அரசுக்குத் தனது யோசனைகளைத் தெரிவித்து வருகிறது. காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி சமீபத்தில் கருத்துத் தெரிவிக்கையில், புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதோடு, அவர்களை அவர்களுடைய சொந்த மாநிலங்களுக்கு அனுப்பி வைப்பது குறித்து சம்பந்தப்பட்ட மாநிலங்கள் ஆலோசிக்க வேண்டும் என்றும் கூறினார்.

இந்த நிலையில், கொரோனா தொற்றை கண்டறிவதற்கான பரிசோதனை வசதிகள் போதிய அளவில் இல்லாதது ஒரு பிரச்சினையாக இருப்பதாக முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் கூறி உள்ளார். கொரோனாவைக் கட்டுப்படுத்த தீவிர பரிசோதனை தேவை என்றும், சிறந்த பரிசோதனை வசதிகள் இல்லாமல் நோய்க் கிருமியின் அச்சுறுத்தலை நாம் சமாளிக்க முடியாது என்றும் அவர் கூறி இருக்கிறார்.

# மாநில முதல்வர்களோடு மோடி காணொலி மூலம் ஆலோசனை



புதுடெல்லி,ஏப்.27

இந்தியாவில் நாடு முழுவதும் அமலில் உள்ள ஊரடங்கை நீட்டிக்கலாமா அல்லது விலக்கிக் கொள்ளலாமா என்பது குறித்து மாநில முதல்வர்களுடன் பிரதமர் மோடி காணொலி மூலம் இன்று ஆலோசனை நடத்தினார். அவருடன் உள்துறை மந்திரி அமித் ஷாவும் ஆலோசனையில் பங்கேற்றார்.

தமிழகம் சார்பில் முதல்வர் எடப்பாடி பழனிசாமி, சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர், தலைமைச் செயலாளர் சண்முகம், சுகாதாரத்துறை செயலாளர் பீலா ராஜேஷ் ஆகியோர் இந்த ஆலோசனையில் பங்கேற்றனர்.

இந்நிலையில் கொரோனா தடுப்பு நடவடிக்கையாக ஊரடங்கை மேலும் ஒரு மாதம் நீட்டிக்க வேண்டும் என்று பிரதமர் மோடியிடம் ஒடிசா அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

மே 3ந் திகதிக்கு பிறகும் ஊரடங்கை நீட்டிக்க வேண்டும் என்று பிரதமர் மோடியிடம் மேகாலயா முதல்வர் கன்ராட் சங்மா கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் கொரோனாவின் தாக்கம் குறையாததால் ஊரடங்கை நீட்டிக்க வேண்டும் என்று பிரதமரிடம் பீகார், அரியானா உள்ளிட்ட சில மாநில அரசுகளும் வலியுறுத்தின என்த் தகவல் வெளியாகியுள்ளது.

# ஆற்றைக் கடந்து இந்தியாவிற்குள் நுழைந்த பங்களாதேஷ் வாலிபர்!

## கொரோனா சிகிச்சைக்கு வந்தேன் என்றதால் பரபரப்பு

பங்களாதேசை சேர்ந்த வாலிபர் ஒருவர் இரு நாட்டு எல்லையில் உள்ள ஆற்றை நீந்திக் கடந்து இந்தியாவிற்குள் நுழைந்து கொரோனா சிகிச்சைக்காக வந்தே என்று கூறியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது,

கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்தியா தனது அண்டை நாடுகளுடனான எல்லைகள் எல்லாவற்றையும் மூடியுள்ளது.

இந்த நிலையில் பங்களாதேஷில் இருந்து ஆற்று வழியாக வாலிபர் ஒருவர் நீந்தி அசாம் மாநிலத்திற்குள் நுழைந்தார். மேலும், கொரோனா சிகிச்சைக்காக வந்துள்ளேன் என்று அவர் கூறினார்.

“பங்களாதேஷ் சுனம்கஞ்ச் மாவட்டத்தைச் சேர்ந்த வாலிபர் ஒருவர் இரண்டு நாட்டிற்கும் இடையில் ஓடும் குஷியாரா ஆற்றில் நீந்தி அசாம் மாநிலம் கரிம்கஞ்ச் இந்திய எல்லைக்குள் வந்துள்ளார்.

இந்திய எல்லைக்குள் வந்ததும் கிராம மக்கள் அவனைப் பார்க்துள்ளனர். உடனடியாக எங்களுக்கு தகவல் தெரிவித்தனர். நாங்கள் அவரை மீட்டோம்.

அந்த வாலிபருக்குக் காய்ச்சல் இருந்தது. மேலும் தேவையில்லாமல் பேசிக் கொண்டிருந்தார். கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளேன். சிகிச்சை பெறுவதற்காக வந்தேன் என்றார்.

அவனுக்கு கொரோனா இருக்கிறதா? என்பது குறித்து எங்களுக்கு தெரியவில்லை. ஆனால் உடல்நலம் குன்றியிருந்தார். கொரோனா வைரஸ் தொற்று காரணமாக கிராம மக்கள் அவரின் அருகே செல்லப் பயப்பட்டனர். பரிசோதனைக்குப் பின்னரே அவருக்கு தொற்று இருக்கிறதா என்பது தெளிவாகத் தெரியும்” என்று எல்லை பாதுகாப்புப்படை செய்தி தொடர்பாளர் தெரிவித்தார்.

ஏற்கனவே மக்கள் கொரோனா அச்சத்தால் இருக்கும் நிலையில், அடுத்த நாட்டைச் சேர்ந்த ஒருவர் கொரோனா சிகிச்சைக்காக வந்தேன் என்று கூறியுள்ளது அக்கிராம மக்களை அச்சத்திற்குள்ளாக்கியுள்ளது.

# இந்திய நாடாளுமன்ற உறுப்பினரின் குடும்பத்தில் அறுவருக்குத் தொற்று

ஆந்திர மாநிலம் கர்னூல் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரின் குடும்பத்தினர் 6 பேருக்கு கொரோனா வைரஸ் பரவியுள்ளது

இந்தியாவில் கொரோனா வைரசின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. தற்போதைய நிலரப்படி, நாடு முழுவதும் 28 ஆயிரம் பேருக்கு வைரஸ் பரவியுள்ளது.

ஆந்திர மாநிலத்தில் ஆயிரத்து 97 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. வைரஸ் பாதிக்கப்பட்டவர்களில் 231 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 31 பேர் உயிரிழந்துள்ளனர்.

மாநிலத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் குடும்பத்தினருக்கும் கொரோனா வைரஸ் பரவியுள்ளது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கர்நூல் தொகுதியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ் குமாரின் குடும்பத்தினர் 6 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஒய்.எஸ். ஆர். காங்கிரஸ் கட்சியை சேர்ந்த சஞ்சீவ் குமாரின் தந்தை, சகோதரர் உள்பட குடும்பத்தினர் 6 பேருக்கு வைரஸ் பரவியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, வைரஸ் உறுதி செய்யப்பட்ட அனைவரும் மருத்துவமனையின் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். குடும்பத்தினருக்கு வைரஸ் பரவியிருந்தாலும் நாடாளுமன்ற சஞ்சீவ் குமாருக்கு வைரஸ் பரவவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐரோப்பிய நாடுகளில் கொரோனா இறப்புகள் வீழ்ச்சி நோக்கி நகர்கிறது

ஐரோப்பிய நாடுகளில் கொரோனா வைரஸ் தாக்குதலால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை கடந்த சில நாட்களாகப் பெருமளவு குறைந்து வருகிறது.

உலகம் முழுவதும் 29 லட்சத்து 94 ஆயிரம் பேருக்கு கொரோனா வைரஸ் பரவியுள்ளது. வைரஸ் பாதிக்கப்பட்டவர்களில் 19 லட்சத்து 7 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 57 ஆயிரத்து 591 பேரின் நிலைமைமிகவும்கவலைக்கிடமாக உள்ளது.

வைரஸ் பாதிக்கப்பட்டவர்களில் 8 லட்சத்து 78 ஆயிரம் பேர் சிகிச்சைக்கு பின் குணமடைந்துள்ளனர். ஆனாலும், கொரோனாவுக்கு இதுவரை 2 லட்சத்து 7 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர்.



சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா கடந்த சில வாரங்களாக ஐரோப்பிய நாடுகளைப் புரட்டி எடுத்து வந்தது.

இத்தாலி, ஸ்பெயின், பிரான்ஸ், பிரிட்டன் போன்ற நாடுகளில் வைரஸ் தாக்குதலுக்கு பல ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்தனர். கடந்த சில நாள்களாக ஐரோப்பிய நாடுகளில் கொரோனாவின் தாக்கம் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது.

### இத்தாலி

இத்தாலியில் ஒரு லட்சத்து 97 ஆயிரம் பேருக்கு வைரஸ் பரவியுள்ளது. வைரஸ் தாக்குதலுக்கு நேற்று அங்கு 260 பேர் உயிரிழந்துள்ளனர். இதனால் அந்நாட்டில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 26 ஆயிரத்து 644 ஆக உள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் வரை இந்த எண்ணிக்கை இரண்டு மடங்காகவும் அதற்கு முன்னர் மூன்று நான்கு மடங்குகளாகவும் இருந்தன.

### ஸ்பெயின்

ஸ்பெயின் நாட்டில் 2 லட்சத்து 26 ஆயிரத்து 629 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. வைரஸ் தாக்குதலுக்கு நேற்று மட்டும் 288 பேர் உயிரிழந்தனர். இதனால் அந்த நாட்டில் வைரஸால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 23 ஆயிரத்து 190 ஆக உள்ளது.

ஒரு வாரத்தின் முன்னர் நாளொன்றுக்குச் சுமார் 500க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்து வந்த நிலையில் நேற்றைய தினம் இறப்புகள் அதன் அரைவாசியாகப் பதிவாகியுள்ளன.

### பிரான்ஸ்

பிரான்ஸ் நாட்டில் ஒரு லட்சத்து 62 ஆயிரத்து 100 பேருக்கு வைரஸ் பரவியுள்ளது. நேற்று 242 பேர் உயிரிழந்துள்ளனர். இதனால் அங்கு உயிரிழப்புகளின் மொத்த எண்ணிக்கை 22 ஆயிரத்து 856 ஆக அதிகரித்துள்ளது.

ஆனால் கடந்த வாரங்களுடன் ஒப்பிடும் போது மிகக் குறைவான உயிரிழப்பாக இது பதிவாகியிருக்கின்றது. பிரான்ஸில் மூன்று தினங்களுக்கு முன்னர் வரைக்கும் 500க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்து வந்தனர்.

### பிரிட்டன்

இங்கிலாந்தில் ஒரு லட்சத்து 52 ஆயிரம் பேருக்கு வைரஸ் பரவியுள்ளது. அங்கு நேற்று ஒரே நாளில் 413 பேர் உயிரிழந்தனர்.. இதனால் அந்த நாட்டில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 20 ஆயிரத்து 732 ஆக உயர்ந்துள்ளது.

ஏப்ரல் 22ஆம் திகதி 763 பேரும் 25ஆம் திகதி 813 பேரும் உயிரிழந்துள்ள நிலையில் நேற்றைய உயிரிழப்புக்கள் மிகக் குறைவானதாகப் பார்க்கப்படுகின்றது.

### ஜேர்மனி

ஜெர்மனியில் ஒரு லட்சத்து 57 ஆயிரத்து 495 வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. நேற்று 67 பேர் உயிரிழந்துள்ளனர். இதனால் அங்கு மொத்த உயிரிழப்பு எண்ணிக்கை 5 ஆயிரத்து 944 ஆக உள்ளது.

ஏப்ரல் 22ஆம் திகதி 229 பேர் உயிரிழந்ததைத் தொடர்ந்து அங்கு தொடர்ச்சியாக இறப்பு எண்ணிக்கை வீழ்ச்சியை நோக்கிப் பயணித்து வந்தது. நேற்றைய இறப்பு எண்ணிக்கை அதில் மிக மிகக் குறைவானதாகப் பதிவாகியிருக்கிறது.

ஐரோப்பிய நாடுகளில் இவ்வாறு இறப்பு எண்ணிக்கை வீழ்ச்சியை எட்டியிருப்பதை அடுத்து அங்கு கொரோனா பரவல் கட்டுப்பாட்டுக்குள் வருவதற்கான அறிகுறி இது என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## சீனாவுக்கு எதிராக அமெரிக்காவில் கையெழுத்து இயக்கம்

கொரோனா விவகாரத்தில் சீனாவை பொறுப்பேற்க வைக்க வேண்டும் என்று கூறி, அமெரிக்காவில் கையெழுத்து இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா வாழ் இந்தியப் பெண் அரசியல்வாதியான நிக்கி ஹாலி இந்தக் கையெழுத்து இயக்கத்தைத் தொடங்கி உள்ளார்.

சீனாவில் உள்ள வுஹான் நகரில் கடந்த டிசெம்பர் முதலாம் திகதி முதன்முதலாகக் கொரோனா வைரஸ் தோன்றியது. ஆனால் இது தொடர்பாக எச்சரித்தவர்களைச் சீன கம்யூனிஸ்டு அரசு கைது செய்தது, உண்மை தகவல்களை வெளியிடாமல் மறைத்தது, மனிதர்களிடம் இருந்து மனிதர்களுக்கு பரவக்கூடியதுதான் கொரோனா வைரஸ் தொற்று என்பதை தொடக்கத்தில் மறைத்து விட்டது என்று சீனா மீது அமெரிக்கா தொடர்ந்து குற்றம் சாட்டி வருகிறது.

அது மட்டுமல்ல, இந்த வைரஸ், வுஹான் பரிசோதனைக்கூடத்தில் செயற்கையாக உருவாக்கிய ஒன்றுதான் என்பது சீனா மீதான அமெரிக்காவின் சமீபத்திய குற்றச்சாட்டாக உள்ளது.

இந்த நிலையில், அங்குள்ள தெற்கு கரோலினா மாகாண ஆளுநராகவும், ஐக்கிய நாடுகளுக்கான (ஐநா) அமெரிக்கத் தூதராகவும் இருந்த நிக்கி ஹாலி, இந்த விவகாரத்தை தீவிரமாகக் கையில் எடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெள்ளிக்கிழமை இரவு அதிரடியாக ஒரு கையெழுத்து இயக்கம் தொடங்கி உள்ளார். அமெரிக்க நாடாளுமன்றத்துக்கான கோரிக்கை மனுவாக இந்தக் கையெழுத்து இயக்கம் அமைந்துள்ளது. அவர் 1 லட்சம் பேரின் கையெழுத்துக்களை பெற முடிவு செய்துள்ளார்.

இந்த இயக்கத்தை தொடங்கிய சில மணி நேரத்தில் 40 ஆயிரம் பேர் அதில் கையெழுத்து போட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் விவகாரத்தில் தொடர்ந்து பொய் சொல்லி வருகிற சீனாவை, அதற்கு பொறுப்பேற்க வைக்கும் வகையில் அமெரிக்க நாடாளுமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது தான் 'ஸ்டாப் கம்யூனிஸ்டு சீனா' (கம்யூனிஸ்டு சீனாவை தடுத்து நிறுத்துங்கள்) என்னும் கையெழுத்து இயக்கத்தின் கோரிக்கையாக அமைந்துள்ளது.

## வான் தாக்குதலில் தலிபான்கள் 7 பேர் இறப்பு!



ஆப்கானிஸ்தானில் அரசுப் படையினர் நடத்திய வான்வெளித் தாக்குதலில் தலிபான் படையினர் 7 பேர் கொல்லப்பட்டனர் என்று அரசுப் படைகள் அறிவித்தன.

ஆப்கானிஸ்தானில் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வர ஆப்கானிஸ்தான் அரசின் உதவியோடு தலிபான்கள் மற்றும் அமெரிக்கா இடையே போடப்பட்ட அமைதி ஒப்பந்தம் தோல்வியில் முடிந்தது.

இதையடுத்து, மீண்டும் மோதல்கள் நடைபெறத் தொடங்கியுள்ளன.

நாட்டின் லோஹர் மாகாணம் புல் - இ - ஆலம் பகுதியில் உள்ள நஸ்ரி என்ற கிராமத்தில் தலிபான் மறைவிடங்களைக் குறிவைத்து ஆப்கானிஸ்தான் விமானப் படையினர் நேற்று வான்வெளி தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் தலிபான் பயங்கரவாதிகள் 7 பேர் கொல்லப்பட்டனர் என அரசுப் படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் அந்த நாட்டின் குண்டூஸ் மாகாணம் இமாம் ஷாகீப் மாவட்டத்தில் உள்ள ஒரு வீட்டிற்குள் துப்பாக்கியுடன் நுழைந்த மர்ம நபர் அங்கிருந்தவர்கள் மீது கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச்சூடு நடத்தினார்.

இந்தச் சம்பவத்தில் பெண்கள் உட்பட அப்பாவிப் பொதுமக்கள் 7 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

## அலுவலகம் திரும்பினார் பிரி. பிரதமர்!



கொரோனாவில் இருந்து குணமடைந்த பிரிட்டிஷ் பிரதமர் போரீஸ்ஜோன்சன் மீண்டும் அரச கடமைகளை ஆற்றுவதற்காகத் தனது அலுவலகத்திற்குத் திரும்பியுள்ளார்.

போரிஸ் ஜோன்சனுக்கு (வயது 55) கொரோனா வைரஸ் பரவியது கடந்த மாதம் உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து அவர் தன்னைத்தானே 10 நாள்களுக்குத் தனிமைப்படுத்திக்கொண்டார்.

வைரஸ் தொற்றின் தாக்கம் குறையாததால் அவர் கடந்த ஏப்ரல் 6ஆம் திகதி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மறு நாளே (ஏப்ரல் 7) ஜான்சனின் உடல்நிலை மிகவும் மோசமடைந்ததால் தீவிர சிகிச்சைப் பிரிவிற்கு மாற்றப்பட்டார். .

தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த ஜான்சன் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டதையடுத்து அவர் கடந்த 12ஆம் திகதி மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

குணமடைந்த போதும் பிரதமர் ஜோன்சன் தனது வீட்டில் இருந்தவாறே அலுவலகப் பணிகளை மேற்கொண்டுவந்தார்.

இந்த நிலையில், வைரஸ் பாதிப்பில் இருந்து குணமடைந்த பிறகு முதல் முறையாக போரீஸ் ஜோன்சன் அரசுப் பணிகளை மேற்கொள்ள இன்று தனது அலுவலகம் சென்றார்.

லண்டனில் உள்ள பிரதமர் அலுவலகத்தை வந்தடைந்த போரீஸ் ஜோன்சன் தற்போது தனது வழக்கமான அரசுப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

# படையினரைத் தனிமைப்படுத்தும் நிலையத்தை மக்கள் செறிவுள்ள கோப்பாயில் அமைப்பதா?

## பிரதேச சபைத் தவிசாளர் நிரோஷ் சீற்றத்துடன் கேள்வி

*மக்கள் செறிவுக்கு மத்தியில் உள்ள கோப்பாய் கல்வியல் கல்லூரியில் தனிமைப்படுத்தல் முகாம் அமைவது கொரோனாவை சமூக மயப்படுத்துவது போன்றது. எனவே இதனை உடன் படையினர் நிறுத்தவேண்டும் என கோப்பாய் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.*



விடுமுறை இரத்தாகி முகாம்களுக்கு மீளத்திரும்பும் படையினரைத் தனிமைப்படுத்தி கண்காணிப்பதற்காக கோப்பாய் கல்வியல் கல்லூரி வளாகத்தை இராணுவத்தினர் தெரிவு செய்துள்ளனர். அடிப்படையில் மக்கள் செறிவு மிகுந்த பகுதி ஒன்றில் அதிக எண்ணிக்கையானவர்களை தங்க வைத்து சோதனை நடத்துவது தவறான காரியமாகும். மனிதர்களிடத்தில் இருந்து மனிதர்களுக்கு நோய் பரவுதலை இலகுவில் கட்டுப்படுத்த முடியாது என்பதை அறிந்த பின்னரும் மக்கள் செறிவுள்ள இடமொன்றில் தனிமைப்படுத்தல் நிலையத்தை அமைப்பது பொறுப்பற்ற செயலாகும்.

கல்வியல் கல்லூரி பகுதி ஏராளமான வீடுகளைக் கொண்ட பகுதியாகும். சிறுவர்கள், முதியவர்கள் என அதிகமானோர் வாழும் பகுதியாகும். கொரோனாவில் இருந்து சகலரும் பாதுகாக்கப்பட வேண்டும் என எதிர்பார்ப்பதற்குள், கொரோனா பரவாமல் எவ்வாறு மக்கள் நடமாட்டம் அற்ற பகுதிகளில் தனிமைப்படுத்தல் நிலையங்களை அமைக்க முடியும் என்பது பற்றி துறைசார் நிபுணர்களின் ஆலோசனையை பெற வேண்டும்.

துரதிஷ்டவசமாக தொற்று நோய் சம்பந்தப்பட்ட விடயத்தில் மருத்தவத்துறையின் ஆலோசனை பெறாது அரசாங்கம் எதேச்சதிகாரமாக செயற்படுகின்றது.

மருத்துவத்துறையினர் படையினரின் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள் பற்றி அறிந்திருக்கவில்லை. அதேவேளை மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி, அமைச்சரவைக்கு அடுத்த படியாக அரசியல் தரப்பாக நாமே இருக்கின்றோம். எம்மிடம் இதுபற்றி எதுவும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. படிநிலை சார்ந்த எந்தக்க கட்டமைப்பும் நாட்டில் தேவையில்லை, இராணுவ அதிகாரிகள் தனியே முடிவெடுக்க முடியும் என்றால் எதற்காக ஜனநாயகத்திற்காக மக்கள் பணம் செலவிடப்படுகின்றது என்ற கேள்வி உள்ளது. கொரோனாவைக் காட்டி இரகசியமான முறையில் மக்களின் உரிமைகள் நிராகரிக்கப்படுகின்றன.

ஊரடங்கு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரச நிர்வாகம், மக்களின் அபிப்பிராயம் என்பன மேசமான முறையில் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றது.

எல்லாவற்றிற்கும் மேலாக கல்வியியல் கல்லூரி வளாகத்தினுள்ளேயே மனைகள் உள்ளன. அவற்றிற்கு மேலாக தனிமைப்படுத்தல் காலம் நிறைவடைந்தாலும் அங்கு தொற்றாளர்கள் அடையாளப்படுத்தப்படுமாயின் இயல்பு நிலையின் பின்பும் மீள ஆசிரிய மாணவர்கள் கல்வி நடவடிக்கைக்கு திரும்பவதில் தடங்கல்கள் ஏற்படும்.

இவ்வாறாக சகல நிலைமைகளையும் கருத்தில் கொண்டு தனிமைப்படுத்தல் முகாம்களை மக்கள் நடமாட்டமற்ற இடங்களில் அமையுங்கள் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மேலும் தெரிவித்தார்.

## செவனகலவில் 4 கிராமங்களில் 1,800 பேர் தனிமைப்படுத்தலில்

செவனகல பிரதேச செயலகப் பிரிவிலுள்ள நெலும்சிறி, உடமவ்வார, கிரிஇப்பன்ஆர, குமாரகம ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 1,800 பேரை சுயதனிமைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக மொனராகலை பிரதேச சுகாதார பணிப்பாளர் எச்.ஏ.வி. நிரோசன் தெரிவித்துள்ளார்.

வெலிசர கடற்படை முகாமில் கடமையாற்றிய கடற்படை வீரரொருவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை 24ஆம் திகதி கண்டறியப்பட்டுள்ள நிலையில், அந்த வீரர் விடுமுறையில் செவனகலயிலுள்ள தனது வீட்டுக்கு வந்துள்ளதுடன், அயல் கிராமங்களுக்கும் சென்றுள்ளதால், குறித்த கிராமங்களிலுள்ளவர்களை சுயதனிமைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அந்தக் கடற்படை சிப்பாயின் மனைவி, குழந்தைக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளமையுடன், இவர்கள் மூவரும் கொழும்பு ஐ.டி.எச்க்குக் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

## வவுனியாவில் கொரோனாத் தொற்றையடுத்து அரச அதிபர் தலைமையில் அவசரக் கூட்டம்





வவுனியாவில் கொரோனா தொற்று ஏற்பட்டதையடுத்து மாவட்ட அரச அதிபர் சமன் பந்துலசேன தலைமையில் அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று இடம்பெற்றது.

மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் சுகாதார துறையினர், பாதுகாப்பு துறையினர், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது வெலிசறை படை முகாமில் இருந்து வவுனியா, மகாகச்சகொடி பகுதிக்கு விடுமுறையில் வந்த கடற்படை வீரர் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து தற்போதைய நிலைமைகள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன், அந்தக் கடற்படை வீரரரின் வீடு அமைந்துள்ள மகாகச்சகொடி பகுதி முழுமையாக முடக்கப்பட்டுள்ளது. அந்த நபர் வவுனியாவில் நடமாடிய இடங்களையும் முடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார துறையினரால் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் கொரோனா தொற்றை கட்டுப்படுத்த வவுனியா மாவட்டத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை ஊரடங்கு சட்டத்தை நீடிப்பதற்கும் அரசாங்கத்திடம் இக் கூட்ட தீர்மானத்திற்கு அமைவாக மாவட்ட அரச அதிபரால் ஆலோசனை முன் வைக்கப்பட்டுள்ளது.

மேலும், தொற்றைக் கட்டுப்படுத்தி பாதுகாப்பை உறுதிப் படுத்துமாறு பாதுகாப்புத் தரப்பினர், பொலிஸார் மற்றும் சுகாதார துறையினருக்கு அரச அதிபரால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikathir

சித்திரப்போட்டி

தினம் ஒரு தலைப்பு

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு

நாளை (28/04/2020) தலைப்பு
பறக்கும் தட்டு

சித்திரங்கள் தெளிவான முறையில் படம் பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

## காணித் தகராறு வலுத்ததால் அண்ணனைக் கொன்ற தம்பி




சகோதரர்களுக்கிடையில் ஏற்பட்ட காணி பிரச்சினையால் மூத்த சகோதரர் கூரிய ஆயுதங்களினால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் – இபலோகம பகுதியில் இடம்பெற்ற இந்தக் கொடூரச் சம்பவத்தில் 45 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

இளைய சகோதரருக்கும் மூத்த சகோதரருக்கும் இடையில் காணிப் பிரச்சினை காணப்பட்டதாகவும், இந்தப் பிரச்சினை நேற்றைய தினம் வாய்த்தர்க்கமாக மாறியமையை தொடர்ந்து இளைய சகோதரர் தனது அண்ணனைத் தாக்கிக் கொலை செய்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலை செய்த சகோதரர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# வீடுடைத்துத் திருடிய ரூ.6 லட்சம் பெறுமதியான பொருள்கள் பொலிஸாரால் மீட்பு: 5 பேர் கைது!

## வவுனியாப் பொலிஸார் நடவடிக்கை

வவுனியா,ஏப்.27

வவுனியாவில் கொள்ளையிடப்பட்ட 6 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டமையுடன், 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, இறம்பைக்குளம் பகுதியில் வசிக்கும் குடும்பம் ஒன்று கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி மலேசியா சென்றிருந்த நிலையில் வீடு பூட்டப்பட்டிருந்துள்ளது. அந்த வீட்டை உடைத்து உள்ளே சென்ற திருடர்கள் தொலைக்காட்சி, சலவை இயந்திரம், மடிக்கணணி, மின்னழுத்தி, வாயு அடுப்பு, சிலிண்டர், அவண், மிக்ஸ்சி, தண்ணீர் பில்டர், கிளாஸ், கரண்டி உள்ளிட்ட சுமார் 6 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் வவுனியா பொலிஸாருக்குஜ் கடந்த வாரம் கிடைத்த முறைப்பாட்டையடுத்து வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பீ.ஆர்.மானாவடு அவர்களின் வழிப்படுத்தலில் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பிரனித் திஸாநாயக்கா தலைமையில் பொலிஸ் சார்ஜன்ட் சந்தன, பொலிஸ் கான்ஸ்டபிள்களான சமீர, ரணசிங்க, தயாளன் உள்ளிட்ட குழுவினர் மேற்கொண்ட விசாரணைகளையடுத்து திருடப்பட்ட பொருள்கள் மீட்கப்பட்டமையுடன் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 5 பேர் கைது செய்யப்பட்டனர்.



அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளையடுத்து தேக்கவத்தை, கற்குழி, நெளுக்குளம், மகாறம்பைக்குளம், கோவில்குளம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் திருடப்பட்ட பொருட்கள் மீட்கப்பட்டன.



இச்சம்பவம் தொடர்பில் 18 தொடக்கம் 25 வயதிற்குட்பட்ட தேக்கவத்தை, நெளுக்குளம், மகாறம்பைக்குளம் சூசைப்பிள்ளையார்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் கைது செய்யப்பட்ட நபர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# ராஜீவ் கொலை வழக்கில் தண்டனை பெற்ற முருகனின் தந்தை யாழ்ப்பாணத்தில் மரணம்

## அவரின் முகத்தை 'வீடியோ கோல்' மூலம் பார்க்கவாவது அனுமதி வழங்கக் கோரி சட்டத்தரணி மூலம் விண்ணப்பம்

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தமிழகத்தில் ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் முருகன் எனும் ஸ்ரீஹரனின் தந்தை வெற்றிவேல் (75 வயது) இன்று யாழில் மரணமானார்.

புற்று நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே இன்று அதிகாலை அவர் யாழ் போதனா வைத்தியசாலையில் மரணமடைந்துள்ளார்.

இதேவேளை தனது தந்தை இறப்பதற்கு முன்னர் வீடியோ கோலில் தந்தையின் முகத்தை பார்க்க சட்டத்தரணி ஊடாக முருகன் விடுத்த கோரிக்கையை ஈவிரக்கமின்றி தமிழக அரசு மறுத்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.


இந்நிலையில் தந்தையின் உடலையாவது தான் இறுதியாக பார்க்க அனுமதிக்குமாறு முருகன் மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது உறவினர்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட முருகன் வேலூர் மத்திய ஆண்கள் சிறையிலும் அவரின் மனைவி நளினி பெண்கள் சிறையிலும் 28 ஆண்டுகளுக்கும் மேலாக ஆயுள் தண்டனை அனுபவித்து வருகிறார்கள்.

இவர்கள் உட்பட ஏழு பேரையும் விடுதலை செய்யக்கோரி பல்வேறு அரசியல் கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்துகின்றன. தமிழக அரசும் விடுதலை செய்யும் முடிவில் உள்ளது.

ஆனாலும், ஆளுநரின் ஒப்புதல் கிடைக்காத காரணத்தால் ஏழு பேரின் விடுதலையும் தாமதமாகி வருகிறது. இந்த நிலையில், முருகனின் தந்தை மிகவும் கவலைக்கிடமாக இருக்கின்றார் எனச் செய்திகள் வந்தன.

இதுதொடர்பாக, தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமிக்கு 'மிக அவசரம்' என்று குறிப்பிட்டு முருகனின் வழக்கறிஞர் புகழேந்தி நேற்று முன்தினம் இரவு கடிதம் ஒன்றை



அனுப்பினார்.

அந்தக் கடிதத்தில், முருகன் என்கிற ஸ்ரீகரனின் தந்தை வெற்றிவேல் ( வயது 75) புற்றுநோயால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரின் உடல்நிலை மிகவும் மோசமாக உள்ளது. தந்தையின் முகத்தைக் கடைசியாகப் பார்க்க சிறையில் உள்ள முருகனுக்கு மனிதாபிமான அடிப்படையில் வீடியோ கோல் அனுமதி வழங்க வேண்டும்" என்று கூறியிருந்தார்.

ஆனால், அனுமதி கிடைக்கவில்லை. இந்த நிலையில், முருகனின் தந்தை இன்று அதிகாலை 3.30 மணியளவில் மருத்துவமனையில் மரணமடைந்தார்.

கடைசியாகத் தந்தையின் உடலையாவது ஒரு முறை பார்க்க வீடியோ கோல் அனுமதி வழங்க வேண்டும் என்று வழக்கறிஞர் மூலமாகச் சிறையில் உள்ள முருகனும் இலங்கையில் உள்ள அவரின் குடும்பத்தினரும் தமிழக அரசுக்கு உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# கொரோனா இடர்கால உதவியில் எமக்காக நாமாவோம்' அமைப்பு!

கொரோனா இடர்கால உதவிகளை வாட்ஸ் அப் சமூக செயலியூடாக இணைந்த 'எமக்காக நாமாவோம்' குழுவினர் இலங்கையிலும் இந்தியாவிலும் மிக வெற்றிகரமாக செயற்படுத்தி வருகின்றனர்.

கொரோனா இடர்காலம் நாளாந்த கூலித்தொழிலாளர் குடும்பங்களையும் ,பெண் தலைமைத்துவ குடும்பங்களையும், மாற்றுத் திறனாளிகள் குடும்பங்களையும் பெரும் பொருளாதார இடர்நிலைக்கு இட்டு சென்றது.

இதனை கருத்தில் கொண்டு அவர்களின் தேவை அறிந்து கிராமம் கிராமமாக தமது நிவாரண உதவிகளை இலங்கையின் வடக்கு,கிழக்கு பகுதிகளில் செயற்படுத்தினர்.

இதுவரை 1000 பேருக்கு பெறுமதியான உணவுப்பொருள் பொதிகளை 13 கட்டங்களுக்கு மேலாக சுழற்சி முறையில் வழங்கியுள்ளனர் .

இதனைவிட விவசாயிகளின் உற்பத்திப் பொருள்கள் விற்பனையற்று இருக்கும் நிலையில் அவற்றை மொத்தமாக கொள்வனவு செய்து அந்த அந்தப் பகுதிகளில் உள்ளவர்களுக்கு பகிந்தளிக்கின்றனர். இதன்மூலம் விவசாயிகள் நஷ்டம் அடையாமல் இருப்பதோடு அருகில் இருக்கும் வறிய குடும்பங்களும் நிவாரணமாக காய்கறிகளை பெற வழிவகை செய்கின்றனர்.

மக்களுக்கு கொரோனா காலத்து விழிப்புணர்வுகளை வழங்கியதோடு, நீண்ட கால செயற்பாட்டுக்குரிய பயனாளிகளை இனங்கண்டு தமது உதவித்திட்டங்களை விஸ்தரித்துள்ளனர்.

இலங்கை தவிர்ந்து இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ள இலங்கைத்தமிழர்களை முகாம்களில் சந்தித்து, தமது தொடர் உதவித்திட்டங்களை தற்போது விஸ்தரித்துள்ளமை சமூக அக்கறை உள்ள ஒரு சமூகத்தின் தோற்றுவாயை வெளிப்படுத்தியுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு
விளம்பரம் (8cm x 5cm) பிரசுரிக்க!
கருப்பு வெள்ளை – ரூபாய் 500/-
முழு வர்ணம் – ரூபாய் 1000/-
தொடர்புகளுக்கு: 076 443 8622
kalaikkathiradvt@gmail.com




வேலைவாய்ப்பு – இரவுக் காவலாளி
யாழ். நகரப்பகுதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு இரவுக்காவலாளி ஒருவர் தேவை. முழுநேரமாக தங்கிநின்று வேலைசெய்தால் உணவு, தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 307 8799

புழுக்கொடியல் விற்பனைக்கு.
சுத்தமான சுகாதாரமான முறையில் பொதியிடப்பட்ட புழுக்கொடியல் 1/2kg, 1/4kg பைக்கற்றுகளில் விற்பனைக்கு உண்டு. தேவைப்படின் வீடுகளுக்கும் விநியோகம் செய்யப்படும். (மேலதிக கட்டணத்துடன்)
தொடர்புகளுக்கு: 076 100 5277

தோட்டக்காணி தேவை
மரக்கறித் தோட்டம் செய்யக்கூடிய வளமான செம்மண் உள்ள காணி குத்தகைக்குத் தேவை. இரசாயண உரங்கள், கிருமிநாசினிகள் ஆகியவை பாவிக்காத காணி விரும்பத்தக்கது.
உரிய முறையில் பராமரித்து குத்தகை முடிவில் நல்ல நிலையில் திருப்பிக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 078 284 5000

வீட்டுத்தோட்ட விதைகள் விற்பனைக்கு
வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகள் விற்பனைக்கு உண்டு.
வெண்டி, பயிற்றை, கத்தரி, கீரை, தக்காளி, பாகல், மிளகாய், சோளம், பூசணி, முள்ளங்கி, பீற்றூட், புடோல், கறிமிளகாய், சிறகவரை.
(வீடுகளிற்கும் விநியோகிக்கப்படும்.)
தொடர்புகளுக்கு: 077 411 4422

# தேர்தல் நேரத்தில் வேட்பாளர்களின் பிரசாரத்துக்கு விசேட பாஸ் அனுமதி

கொழும்பு, ஏப். 27

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது பிரதேசங்களில் பிரசாரங்களையும் மக்கள் சந்திப்புக்களையும் மேற்கொள்ள விசேட பாஸ் அனுமதிகளை அந்தந்த பொலிஸ் பிரிவில் பெற்றுக்கொள்ள முடியுமெனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

வேட்பு மனுக்களிலுள்ள பெயர்கள் எதிர்வரும் 4 ஆம் திகதி உறுதி செய்யப்பட்ட பின்னர் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் அந்த நாள் முதல் தமக்குரிய பொலிஸ் பாஸ் அனுமதிப்பத்திரங்களைத் தத்தமது பொலிஸ் நிலையங்களில் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமென அவர் தெரிவித்திருக்கிறார்.

ஒரு மாவட்டத்தைச் சேர்ந்த வேட்பாளர் மற்றொரு மாவட்டத்தில் பாஸ் அனுமதியைப் பெற முடியாது. தமது மாவட்டத்துக்குள் மாத்திரமே அவர் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

வேட்பாளர்கள் மக்களைச் சந்தித்து தமக்கு ஆதரவு அளிக்குமாறு கோரவும் தமது கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் கொள்கை விளக்கங்களை மக்களுக்கு வழங்கவும் ஊரடங்கு காலத்தில் இந்தப் பாஸ்களை பயன்படுத்த முடியும்.

ஆனால் இந்தப் பாஸ் நடைமுறையை வைத்துக் கொண்டு நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்காகப் பணத்தையோ உணவுப் பொருட்களையோ மற்றும் அத்தியாவசியப் பொருட்களையும் நிவாரண உதவியாக வழங்க முற்பட்டால் தேர்தல் முறைகேடாகக் கருதப்பட்டு அந்த நபர் கைது செய்யப்படலாம் என்பதையும் ஆணைக்குழு தலைவர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

தம்மிடம் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவுமாறு வேட்பாளர்கள் சிலர் விடுத்த கோரிக்கைகளை அடுத்து ஆணைக்குழு தலைவர் மஹிந்த தேசப்பிரிய இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

# யாழ்.நகரப் பகுதிகளில் ரூ.10 லட்சம் பெறுமதியான பொருள்களைத் திருடி, விற்ற எண்மர் குழு சிக்கியது



யாழ்.நகரப்பகுதிகளில் 10 லட்சம் ரூபா பெறுமதியான இலத்திரனியல் பொருள்களைக் களவெடுத்த திருடர்களையும் திருடிய பொருட்களை வாங்கிய நபர்களையும் யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் நீதிமன்றத்திற்கு முன்பாக உள்ள நகர அபிவிருத்தி அதிகார சபைக்கான கட்டடம் நிர்மாணிக்கும் இடத்தில் இருந்து சுமார் 5 லட்சம் பெறுமதியான கட்டடப் பொருள்கள் மற்றும் உபகரணங்களையும், யாழ்.நகரப் பகுதிகளில் உள்ள கடைகளில் இருந்து வேறு சில பொருள்களையும் இவர்கள் திருடி விற்பனை செய்துள்ளார்கள் என்று கூறப்படுகின்றது.

இவ்வாறு 3 இடங்களில் திருடிய இலத்திரனியல் பொருள்கள் மற்றும் கட்டட நிர்மாணப் பணி செய்யும் இலத்திரனியல் பொருள்கள் என்பனவற்றைத் திருடியவர்கள் என்று கூறப்படும் யாழ்.நாவாந்துறை மற்றும் பொம்மைவெளி, கஸ்தூரியார் வீதி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த எட்டுப் பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ தலைமையிலான, யாழ்ப்பாணம் சிறு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரிற்கு கிடைத்த தகவலின் பிரகாரம், சிறு குற்றப்பிரிவு பொலிஸ் அதிகாரி எம்.எம்.ஆர்.சி. முனசிங்க மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களான ஹர்சன், ஹபுலியட்ட, கவியரசன், ரஞ்சித், கிங்ஸ்லி மரியசிறி, உபாலி, ரட்ணாயக்க,சுரேகா உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் இணைந்து இவர்களைக் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபர்களை மீட்கப்பட்ட பொருட்களுடன் யாழ்ப்பாணம் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை யாழ்ப்பாணம் சிறு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் என யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ மேலும் தெரிவித்தார்.

# வேலணை மத்திய கல்லூரியில் நேற்று மாலை திடீர்த் தீ விபத்து







வேலணை மத்திய கல்லூரியில் நேற்று மாலை திடீரென ஏற்பட்ட தீயினால் பாடசாலைவளாகம் பரபரப்பானது.

பற்றி எரிந்த தீ அயலிலுள்ள உள்ள பொதுமக்களின் முயற்சியினால் அணைக்கப்பட்டது. அவர்களின் உடனடி முயற்சியினால் இப் பாரிய தீ அனர்த்தம் தவிர்க்கப்பட்டது.

இத்தீயினால் பாடசாலை வளாகத்தில் நின்ற பயன்தரும் மரங்கள் மற்றும் குடிநீர் இணைப்பு குழாய்கள் என்பன அழிவடைந்துள்ளன.

இத் தீ அனர்த்தம் எப்படி ஏற்பட்டது என்பது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. பாடசாலை தற்போதைய சூழ்நிலையில் முழுமையாக மூடப்பட்டுள்ளது. யாரும் உட்பிரவேசிக்க முடியாது. அத்தோடு ஊரடங்கு சட்டம் உள்ள நேரத்தில் இத் திடீர் தீப்பரவல் ஏற்பட்டுள்ளதால் இது நாசவேலையாக இருக்கலாமென மக்கள் சந்தேகிக்கின்றனர்.

# 25 க்கும் அதிக இலங்கையர்கள் லண்டனில் கொரேரானாவால் பலி!

லண்டன், ஏப். 27

பிரித்தானியாவில் விரைவாக பரவி வரும் கொரோனா தாக்கத்தினால் இதுவரை 20,732 பேர் உயிரிழந்துள்ளனர். கொரோனாவை கட்டுப்படுத்த அந்த நாடு பல நடவடிக்கைகள் எடுத்தும், இதுவரை கொரொனா கட்டுக்குள் வரவில்லை.

பிரித்தானியாவில் சுமார் 25 இலங்கையர்கள் கொரோனா தாக்கத்தால் உயிரிழந்துள்ளனர் என பிரிட்டனில் உள்ள இலங்கைத் தூதரக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பிரிட்டன் குடியுரிமை பெற்று நீண்ட காலமாக அங்கு வாழ்பவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். பிரிட்டனில் உள்ள சுமார் 900 இலங்கையர்கள் நாடு திரும்ப விரும்புவதாக தூதரக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மாணவர்கள், பயிற்சிக்காகச் சென்ற மருத்துவர்கள், சுற்றுலா சென்றவர்கள் இந்த வகைக்குள் அடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.04.2020 இல் வெளியிடப்பெற்றது.